DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024

Prosecution Witness - P.W. 8

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மோகன்பிரபு |
| Father's Name | : | தாஸ் |
| Village | : | ஐயகோடு |
| Taluk | : | திருவட்டார் |
| Calling | : | கூலி |
| Age | : | 36 |
| Date | : | 09.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>09.09.2025</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் வலியாற்றுமுகத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 02.01.2024 அன்று காலை 9 மணியளவில் வலியாற்றுமுகம் ஜங்சனில் வைத்து அனீஷ் போலீசார் கைது செய்தார்கள். அப்போது நான் அங்குதான் இருந்தேன். போலீசார் அவரை விசாரித்தார்கள். அப்போது அவன் ஒரு வாக்குமூலம் கொடுத்தான். அதை போலீசார் பதிவு செய்தார்கள். வீட்டு சாவி ஒன்றை வரும் வழியில் மங்கலம் ஜங்சன் அருகில் ரோட்டின் ஓரத்தில் உள்ள ஒரு

புதறில் போட்டுள்ளதாக கூறினான். அனீஷ் அதில் கையொப்பம் செய்தான். அதில் நானும், ரஞ்சித் என்பவரும் அதில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அனீஷ் சொன்ன இடத்திற்கு அவரை கூட்டி சென்றார்கள். நானும், ரஞ்சித்தும் அவர்களுடன் சென்றோம். அனீஷ் புதறில் இருந்து சாவியை எடுத்துக் கொடுத்தான். சாவியை போலீசார் அத்தாட்சி தயார் செய்து வாங்கி கொண்டார்கள். அதில் நானும், ரஞ்சித்தும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த அத்தாட்சிதான். **அது அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 சாவியை தான் அப்போது ஆஜர் எதிரி எடுத்துக் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

புளிமூடு பஸ் ஸ்டாப் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மங்கலம் ஜங்சன் ரோடு எந்த திசையிலிருந்து எந்த திசைக்கு போகும் ரோடு என்றால் குலசேகரத்திலிருந்து பொன்மனைக்கு செல்லும் ரோடு, திசை எனக்கு தெரியாது. மங்கலம் ஜங்சன் என்று சொல்லவதற்கு என்ன அடையாளம் இருந்தது என்றால் கடைகள் எல்லாம் இருந்தது. இடதுபுறம் இரு பாலம் சென்றது. அந்த பாலம் ரோட்டிற்கு வடக்கு பக்கம் தென்வடலாக உள்ளது என்றால் திசை எனக்கு தெரியாது. அந்த இடத்தில் பஸ் ஸ்டாப் இருக்கிறதா என்றால் இருக்கிறது. பொன்மனையிலிருந்து குலசேகரம் வரும்போது பஸ் ஸடாப் வலதுபுறம் உள்ளதா,

இடது புறம் உள்ளதா என்றால் இரண்டு புறமும் உள்ளது. பஸ் நிறுத்தம் என எழுதப்பட்டு உள்ள கட்டிடம் எந்த பக்கம் உள்ளது என்றால் குலசேகரத்திலிருந்து பொன்மனை போகும்போது வலது புறத்தில் உள்ளது. அந்த பஸ் ஸ்டாப் கட்டிடத்திலிருந்த சா.பொ. 1 சாவியை எடுத்த புற்று எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் பாலத்தை தாண்டி 10, 20 அடி தூரத்தில் மெயின் ரோட்டில் இடது புறம் இருந்தது. அந்த புற்றிலிருந்து தண்ணீர் செல்லும் சானலின் கரை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 2 அல்லது 3 அடி இருக்கும். சாவி எடுத்த இடத்திலிருந்து அந்த ரோடு எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 1 அடி தொலைவு இருக்கலாம். சாவி எடுத்த சமயத்தில் போட்டதாக சொல்லும் கையொப்பம் நான் சாவியை எடுக்கும் முன்னர் போட்டேனா, எடுத்த பிறகு போட்டேனா என்றால் எடுத்த பிறகு போட்டேன். நான் கையொப்பம் போட்டது எழுதப்பட்ட வெள்ளைத் தாளிலா என்றால் ஆமாம். அந்த சாவியை எடுத்து யார் அந்த தாளில் எழுதினார்கள் என்றால் உதவி ஆய்வாளர் எழுதினார். உதவி ஆய்வாளர் என்றால் யார் என்று தெரியுமா என்றால் தெரியும். பொன்மனையிலிருந்து வலியாற்றுமுகம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 4 கிலோமீட்டர் தொலைவு உள்ளது. எந்த திசையில் உள்ளது என்றால் திசை எனக்கு தெரியாது. பெருஞ்சாணி - பொன்மனையிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவு உள்ளது என்றால் சரிதான். என்னுடன் கையொப்பம் போட்டதாக சொல்லும் நபருக்கு எந்த ஊர் என்றால் பெருஞ்சாணி பக்கத்தில், எந்த ஊர் என்று தெரியாது. அவர் பெயர் தெரியுமா என்றால் ரஞ்சித். நான் சொல்வது போல எதுவும் நடக்கவில்லை என்றாலும் ரஞ்சித் சொல்லி கொடுத்து கையொப்பம்

செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடன் கையொப்பம் போட்டதாக சொல்லும் ரஞ்சித் என்பவர் இறந்துபோன முத்துபிள்ளையின் மகள் ஷைனியின் கணவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ரஞ்சித்தின் ஏற்பாட்டில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.